# துவாக்குடி நகராட்சி

| மன்ற கூட்ட நாள் | தீர்மான எண் | பொருள் | அலுவலகக்குறிப்பு |
|---|---|---|---|
| *2021–ம் ஆண்டு ஜீன் மாதம் 16–ம் தேதி புதன்கிழமை காலை 10.15 மணிக்கு துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க சாதாரணக் கூட்டம் நடைபெறும்.* | | | |
| 16.06.2021 | 621 | **பொருள் எண். 1**<br>துவாக்குடி நகராட்சியில் ஒரு அம்மா உணவகம் தற்போது செயல்பட்டு வருகிறது. மேற்படி அம்மா உணவகத்தில் நாள் ஒன்று ரூ.249./ என்ற தினக்கூலியில் சுய உதவிக்குழு (12) பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.<br>இந்நிலையில் அம்மா உணவககளில்' பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கான தினக்கூலினியினை நாள் ஒன்றுக்கு ரூ.325./ ஆக உயர்வு செய்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழ கல் துறை, (**அரசாணை எண்-2 நாள் 26.02.2021** அரசாணையில் உத்திரவிடப்பட்டுள்ளது.<br>மேலும் இதற்கான கூடுதல் செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டும். என்றும், ஊதியம் மற்றும் நிர்வாக செலவினம் நகராட்சியின் மொத்த வருவாயில் 49 சதவீதத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.<br>மேற்படி அரசாணையினை பார்வையிட்டு பதிவு செய்வதற்கும் நகராட்சியில் செயல்பட்டுவரும் அம்மா உணவ'களில் பணிபுரிந்துவரும் சுயஉதவிக்குழு பணியாளர்கள் 26.02.2021 முதல் புதிய தினக்கூலி வழகும் வரை உள்ள நாட்களுக்கு நிலுவைத் தொகை வழ க்வும்'தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. அரசாணையினை பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>2. அம்மா உணவகத்தில் பணிபுரிந்து வரும் சுய உதவிக்குழு பணியாளர்களுக்கு 26.02.2021 முதல் தினக்கூலியினை நாள் ஒன்றுக்கு ரூ.325./ என நிர்ணயம் செய்யலாம்.<br>3. கூடுதல் செலவீனத்தை நகராட்சியின் பொது நீதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>**ந.க.எண்** 380/எப்1/2020 | அனுமதிக்கப்பட்டது. |
| | 622 | **பொருள் எண். 2**<br>துவாக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சாலையோர வியாபாரம் செய்து வரும் வியாபாரிகள் **161** நபர்களுக்கு சாலையோர வியாபார சான்று வழங்குவதற்கும் **157** நபர்களுக்கு GIS புகைப்பட | அனுமதிக்கப்பட்டது |

அடையாள அட்டை மற்றும் வியாபார சான்று தயார் செய்து வழங்குவதற்கும், மேலும் சாலையோர வியாபாரிகளின் இணைய வழிதரவு தளத்தினை பராமரிக்கவும்

161 நபர்களுக்கு சாலையோர வியாபார சான்று வழங்குவதற்கு : 8050.00

157 நபர்களுக்கு GIS புகைப்பட அடையாள அட்டை மற்றும் வியாபார சான்று தயார் செய்து வழங்குவதற்கு : 47,100.00

மொத்த பட்டியல் தொகை – ரூ. 55,150.00

மேற்கண்ட விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள **M/s The Athens Charitable and Educational Trust** ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியை ஒப்புநோக்கு பட்டியலின் குறிப்பின் படி ஏற்றுக்கொள்ளவும் பணி உத்திரவு வரைவு ஒப்புதலுக்கு. மன்ற பொருள் வரைவு ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்

**ந.க.எண். 0014/2014/** எப்1

623

**பொருள் எண். 3**

துவாக்குடி நகராட்சியில் இயங்கும் எம்.டி சாலை சமுதாயக்கூடத்தினை திரு. லோகநாதன் என்பவர் 17.05.2021 அன்று சுப நிகழ்ச்சிக்காக பதிவு செய்திருந்தார். கொரோனா பெருந்தொற்று காரணமாக அன்னார் அவர்களால் அந்நிகழ்ச்சியானது ரத்து செய்யப்பட்டது. திரு. லோகநாதன் அவர்கள் சமுதாய கூடத்தினை பதிவு செய்தமைக்காக தாம் செலுத்திய தொகை ரூ. 5000/– திரும்ப வழங்கிட கோரி வேண்டியுள்ளார். இந்நகராட்சி கருவூலத்தில் செலுத்திய செல்லான் எண். 088/01/2/21–22/0000390 நாள். 06.05.2021. அன்னார் அவர்களது கணக்கில் திரும்ப வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு –** மன்றம் அனுமதி வழங்கலாம்

**ந.க.எண்** 952/இ1/2020

அனுமதிக்கப்பட்டது.

624

**பொருள் எண். 4**

துவாக்குடி நகராட்சி பகுதியில் 2021–22 பொது நிதியின் (குடிநீர் நிதி) கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண் 1 முதல் 6 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் விநியோக குழாய், அடிபம்புகள் மற்றும் மினி பவர் பம்புகள் வருடாந்திர பணி மேற்கொள்ளுதல் | 7.00 |

**அலுவலகக்குறிப்பு :–** 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி உடன் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 410 /2020/இ1**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண். 5**

625 தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்ட விதிகள் 15ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அனுமதிக்கப்பட்டது

| வ. எண் | பணியின் பெயர் | செலவினம் (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | துவாக்குடி நகராட்சியில் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2021 ஏப்ரல் 6 ஆம் தேதி நடைபெற உள்ளதால் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 244 முதல் 275 வரை உள்ள 44 வாக்கு சாவடிகளில் உள்ள 13 வாக்கு சாவடிகளில் சாய்வு தளம் மற்றும் மின் இணைப்பு வசதி செய்தல் | ரூ.1,20,000/– |

**அலுவலகக்குறிப்பு :–** **பதிவு செய்யலாம்.**

**ந.க.எண்.212/2021/சி1**

**பொருள் எண். 6**

626 துவாக்குடி நகராட்சி பகுதியில் 15 –வது மத்திய நிதிக்குழு மானியம் 2021–22–ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை மற்றும் குடிநீர் பணிக்காக ரூ.63,23,443/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து கீழ்கண்ட குடிநீர் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அனுமதிக்கப்பட்டது

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | துவாக்குடி நகராட்சியில் முத்துராமலிங்க தேவர் சாலை முதல் கண்ணனூார் மாரியம்மன் கோவில் வரை குடிநீர் விநியோகக்குழாய் அமைத்தல். | 9.95 |
| 2. | சமாதான புரம் பிரதான சாலையில் குடிநீர் விநியோகக்குழாய் அமைத்தல். | 9.95 |
| 3. | முத்துராமலிங்க தேவர் சாலையில் உள்ள மேல்நிலை நீர்தேக்கத்தொட்டியில் நீர் அளவுமானி மற்றும் அளவுகோல் பொருத்துதல் மற்றும் சமாதானபுரம் குறுக்கு தெருவிற்கு குடிநீர் விநியோகக்குழாய் அமைத்தல். | 9.50 |
| 4. | அண்ணாநகர் முதல் அன்பு பள்ளி வரை ஆழ்துளை கிணறுடன் HDPE தொட்டி அமைத்தல் | 9.00 |
| 5. | பழைய கருப்பு கோவில் தெரு முதல் முத்துராமலிங்க தேவர் சாலை பொது தெரு வரை ஆழ்துளை கிணறுடன் HDPE தொட்டி அமைத்தல் | 7.00 |
| 6. | அய்யம்பட்டி சுடுகாடு பகுதியில் ஆழ்துளை கிணறுடன் HDPE தொட்டி அமைத்தல் | 4.00 |

| | | |
|---|---|---|
| 7. | பெரியார் திடலில் உள்ள மேல்நிலை நீர்தேக்கத்தொட்டியை சரிசெய்தல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 9.90 |
| 8. | வார்டு எண்.1 அங்காளம்மன் கோவில் தெரு சீரணி அரங்கம் அருகில் ஆழ்துளை கிணறுடன் HDPE தொட்டி அமைத்தல் | 4.70 |
| | **மொத்தம்** | 64.00 |

**அலுவலக குறிப்பு : –** 1. நிர்வாக அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைக்கு மேல் கூடுதல் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1426 /2020/இ1)**

ஆணையர்(பொ),
துவாக்குடி நகராட்சி.